

சின்னாளபட்டியில் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த 200 கர்ப்பிணிப் பெண்களுக்கு நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டு கர்ப்பிணிப் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கோட்டாட்சியர் திருமலை, வட்டாட்சியர் முத்துமுருகன், ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், ரெட்டியார்சத்திரம் மணி, ராஜேந்திரன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின் விவசாயிகள் விரோத - தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்து

# நாளை (பிப்.12) தொழிற் சங்க அமைப்புகள் நடத்தும் வேலைநிறுத்தத்திற்கு தி.மு.க. ஆதரவு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வரி தொழிற்சங்கங்கள், துறை வாரியான தொழிற்சங்க சம்மேளனங்கள், விவசாய அமைப்புகள் இணைந்து ஒன்றிய அரசின் விவசாயிகள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத மற்றும் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து நடைபெறுகிற வேலை நிறுத்தத்தில் ஒன்றிய அரசாங்கம் தன்னிச்சையாக மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்காமலும், தொழிற்சங்கங்களோடு முறையாக கலந்து ஆலோசிக்காமலும், நாடாளுமன்றத்தில் விவாதமின்றியே நிறைவேற்றிய 4 தொகுப்பு சட்டங்களை திரும்பப் பெற வேண்டுமென்பதும், மின்சார சட்டத்தை திருத்துவதன் மூலம் உற்பத்தி பகிர்மானம் போன்றவைகள் தனியார் மயமாக்கும் அபாயம் உள்ளதையும்,

விவசாயிகளின் விளைபொருளுக்கு நியாயமான விலை வழங்குவோம் என்ற உத்திரவாதத்தை இதுவரை நிறைவேற்றாததை கண்டித்தும், விதைகள் சட்டத்தை திருத்தம் செய்து சிறு குறு விவசாயிகள் கைவசம் உள்ள விதைகளை செயல்படாமல் செய்யும் போக்கை கண்டித்தும், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை பெயர் மாற்றம் செய்து ஒன்றிய அரசின் பொறுப்பை தட்டிக் கழித்து மாநிலங்களின் நிதிச் சுமையை கூடுதலாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதை திரும்பப் பெற வேண்டுமென்பதை வலியுறுத்தியும் நாளை (பிப்.12) நடைபெறுகிற வேலை நிறுத்தத்திற்கு தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற வேண்டும் விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்கிற நல்ல நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள் ; 10,02,2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### ஒன்றிய அரசின் முட்டுக்கட்டைகளை தாண்டி இந்தியாவின் முகமாக தமிழ்நாடு

# முதல்வரின் முன்னெடுப்புகளால் தொழிற்துறையில் முன்னணி மாநிலமாக விளங்குகிறது!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, பிப். 11 –

ஒன்றிய அரசின் முட்டுக்கட்டைகளை தாண்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்புகளால் தொழிற்துறையில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.



தினகரன்
பிப்ரவரி 10, 2026 செவ்வாய்க்கிழமை
சமச்சீர் தொழில் வளர்ச்சி
தமிழ்நாடு, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும், தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. மாநிலத்தில் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை மேம்படுத்திடவும் முதல்வர் மு.க.ஸ்டாலின், பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை எடுத்து வருகிறார். அவரது, அளப்பரிய ஊக்கம் காரணமாக பல்வேறு புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் திறக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை பெற்று வருகின்றனர். 2030க்குள் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகும் எனும் இலக்குடன் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடுகள் நடத்தப்பட்டு, புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பணியில் சாதனை படைத்துள்ளது.

அது வருமாறு:

தமிழ்நாடு, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும், தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. மாநிலத்தில் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை மேம்படுத்திடவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை எடுத்து வருகிறார். அவரது, அளப்பரிய ஊக்கம் காரணமாக பல்வேறு புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் திறக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை பெற்று வருகின்றனர்.

2030க்குள் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகும் எனும் இலக்குடன் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடுகள் நடத்தப்பட்டு, புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பணியில் சாதனை படைத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்கா வில், பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் நிறுவனம், ரூ.1,003 கோடியில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன்கவர் கண்ணாடி பொருட்கள் உற்பத்தி திட்டத்தையும், தொடர்ந்து கும்மிடிப்பூண்டியில் 2,104 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

அந்த வரிசையில் ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி பனப்பாக்கத்தில் 1,231 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டுள்ளது. டாடா மோட்டார்ஸ் குழுமம், 5 ஆண்டுகளில் ரூ.9 ஆயிரம் கோடி முதலீட்டில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக 2024ம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டு, 16 மாதங்களில் நேற்று திறக்கப்ப ட்டது. இதில் ஜாகுவார், லேண்ட் ரோவர் கார்கள் உற்பத்தி செய்யப்படும்.

இந்தியாவின் வாகன உற்பத்தி மையம் தமிழ்நாடு தான். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைந்த மாநிலம் தமிழ்நாடு. தொழில் செய்ய உகந்த மாநிலம் தமிழ்நாடு. முதலீடுகள் செயல்பாட்டு மாநாடு நடத்த திட்டமிட்டுள்ளோம். என டாடா மோட்டார்ஸ் ஆலையில் கார் உற்பத்தியை தொடங்கி வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியுள்ளார்.

தி.மு.க. ஆட்சியில் 2021க்கு பிறகு 50க்கும் மேற்பட்ட புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன என்று ஒன்றிய அரசின் புள்ளியியல் அமைச்சக ஆய்வு உறுதி செய்துள்ளது. மேலும் 1.7 லட்சம் இளைஞர்கள், மகளிருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மறைமுகமாக பல லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடை த்துள்ளது. தி.மு.க.வின் கடந்த 58 மாத ஆட்சியில் சராசரியாக பார்த்தால் மாதத்துக்கு ஒரு தொழிற்சாலையை அரசு திறந்து வருகிறது.

ஆனால் முந்தைய ஆட்சியில், 2016–2021 ஆகிய 5 ஆண்டுகளில், 15 ஆயிரத்து 543 கோடி ரூபாய் முதலீட்டில் 21 தொழிற்சாலைகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் பட்டு, அவற்றுள் 12 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

தி.மு.க. ஆட்சியில் சென்னை மட்டுமல்லாமல் அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்சாலைகள் பரவலாக அமைந்து வருகின்றன.

இது மாநிலத்தின் சமச்சீர் தொழில் வளர்ச்சியை காட்டுகிறது. உலகளவில் உள்ள பெரிய தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகளை நிறுவ இந்தியாவின் முகமாக தமிழ்நாட்டை பார்க்கின்றனர். ஒன்றிய அரசின் முட்டுக்கட்டைகளை தாண்டி தொழில் துறையில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் இருக்கும் குறைபாடுகளைத் தீர்க்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.11-

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தில் இருக்கும் குறைபாடுகளை CAG எனப்படும் தலைமை கணக்குத் தணிக்கையாளர் அவரது விரிவான அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதை தொடர்ந்து, அதனை தீர்ப்பதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்றும், அத்திட்டத்தின்படி திறன் மேம்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்பது உள்ளிட்ட பல கேள்விகளை நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சருக்கு திமுக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :-

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின் பயனாளிகளுக்கு வேலை வாய்ப்பு குறைபாடு, தகுதி விதிமுறைகளை மீறுதல், பயனாளிகளின் நகல் பதிவுகள், பயிற்சி மையங்களை மூடுதல் மற்றும் பலவீனமான கண்காணிப்பு உள்பட திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள குறைபா டுகளை, CAG அறிக்கையில் சுட்டிக்கா ட்டப்பட்டுள் ளதா? அப்படியானால் அதன் விவரங்களை மாநில வாரியாக தெரிவிக்கவும்.

அத்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படாத நிதி மற்றும் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளதா? அப்படியானால், அதற்கான காரணங்கள் என்ன?

திட்டத்தைச் செயல்படுத்தும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) மற்றும் மாநிலத் திறன் மேம்பாட்டு இயக்கங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு அரசு ஏதேனும் பொறுப்பை நிர்ணயித்துள்ளதா? அப்படி இருந்தால் அதன் விவரங்கள் என்ன?

இத்திட்டத்தில் தற்போதைய மற்றும் எதிர்கால கட்டங்களில் வெளிப்படைத்தன்மை, சிறந்த நிதி பயன்பாடு, நம்பகமான பயனாளி தரவுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புகளை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்திருக்கும் அல்லது எடுக்க திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### சேலம் மாவட்டத்தில்

# 5,240 தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், பிப். 11 -

முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம், சந்திர மஹால் திருமண மண்டபத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளதாவது: -

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச்சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில் முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திடும் வகையில் இன்றையதினம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து சேலம் மாவட்டம் முழுவதும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் 5,240 தூய்மை பணியாளர்கள் இக்காலை உணவு வழங்கும் திட்டத்தில் பயன்பெறுகின்றனர்.

சேலம் மாநகராட்சி சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாப்பேட்டை, கொண்டலாம்பட்டி ஆகிய 4 மண்டலங்களில் 3,000 தூய்மைப் பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். அந்த வகையில் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு GVN திருமண மண்டபத்திலும், அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு தெய்வீகம் திருமண மண்டபத்திலும், அம்மாபேட்டை மண்டலத்திற்கு செங்குந்தர் திருமண மண்டபத்திலும், கொண்டலாம்பட்டி மண்டலத்திற்கு சந்திர மஹால் திருமண மண்டபத்திலும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சேலம் மாவட்டத்திற்குட்பட்ட ஆத்தூர், மேட்டூர், எடப்பாடி, நரசிங்கபுரம், தாரமங்கலம், இடங்கணசாலை மற்றும் சங்ககிரி ஆகிய நகராட்சிகளில் பணிபுரியும் 1,123 தூய்மை பணியாளர்களும், சேலம் மாவட்டத்திற்குட்பட்ட 30 பேரூராட்சிகளில் பணிபுரியும் 1,117 தூய்மைப் பணியாளர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர்.

இவ்வாறாக சேலம் மாவட்டம் முழுவதும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் 5,240 தூய்மை பணியாளர்கள் இக்காலை உணவுத்திட்டத்தில் பயன் பெறுகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா. இளங்கோவன், கொண்டலாம்பட்டி மண்டல குழுத் தலைவர் அசோகன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதல்வர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை காணொலிக் காட்சியின் வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி மண்டலம் சந்திர மஹாலில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.13 கோடியே 24 லட்சம் மதிப்பிலான திட்ட பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்!

ஒட்டன்சத்திரம், பிப்.11 -

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மண்டவாடி, ஓடைப்பட்டி, சிந்தலப்பட்டி, அம்பிளிக்கை, காப்பிளியபட்டி, தங்கச்சியம்மாபட்டி, காவேரியம்மாபட்டி, லெக்கையன்கோட்டை, வடகாடு, தா. புதுக்கோட்டை, சத்திரப்பட்டி, வேலூர் அன்னபட்டி, ரெட்டியபட்டி, பெரியகோட்டை விருப்பாச்சி, அத்திகோம்பை, பெரியப்பூர், ஜவ்வாதுபட்டி, புலியூர்நத்தம், சின்னக்கம்பட்டி, மார்க்கம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம், புதிய நியாய விலை கடை கட்டிடம், தார் சாலைகள் அமைக்கும் பணி, அங்கன்வாடி மைய கட்டிடம், சமுதாயக்கூடம், பயணியர் நிழற்கூடை, பள்ளி கட்டிடம், அங்கன்வாடி மையம், புதியபாலம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கட்டிடம், கலைஞர்கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, உள்ளிட்ட ரூ25.கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்ட பணிகளை அமைச்சர் அர. சக்கரபாணி துவக்கி வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பேசினார்.

நிகழ்வில் கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, கலைஞர் வீடுகள்திட்ட அலுவலர் பிரபாகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், பிரபுபாண்டியன், நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் பொன்னுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காளியப்பன், ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜன், பாலு, வடக்குஒன்றிய பொருளாளர் அழகியண்ணன், அவைத்தலைவர் செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், சிவபாக்கியம் ராமசாமி, ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஒடைப்பட்டி ராஜா, செல்வராஜ், சாரதா சிவராஜ், ரத்தினம். மா. செல்வராஜ், மலர்விழிச் செல்வி, மாலதிவெண்ணிலா, தனலட்சுமி, செல்லம்மாள் தண்டபாணி, சிவராமகிருஷ்ணன், செல்லமுத்து, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அசோக் வேலுச்சாமி, மணி பாரதி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சுரேஷ்குமார், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்டம் மேலூர் தொகுதி மேலூரில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலுக்கு இணங்க தமிழ்நாடு தலைகுனியாது மக்கள் கருத்து கேட்புக் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றதில் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் மக்களிடம் கருத்துக்களை கேட்டறிந்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் வன்னியர் சங்கம், விவசாயிகள் சங்கம், மகளிர் சுயஉதவிக் குழுவினர் பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர். உடன் தொகுதி பொறுப்பாளர் ஆனந்த், நகரச் செயலாளர் முகமது யாசின், தலைமை செயற்குழு உறுப்பினர் கரு தியாகராஜன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினரும் பங்கேற்றனர்.